

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in    murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 79 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 13 – வியாழக்கிழமை 30 அக்டோபர் 2025 – சென்னை 24 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 79 : Thiruvalluvar Year - 2056 - Ayppasi 13 - Thursday 30 October 2025 - Chennai 24 + 8 Pages ₹ 5.00


## தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைக் காப்போம்!

# ஒன்றிய பா.ஜ.க.வின் வாக்குத் திருட்டை முறியடிப்போம்!

## தென்காசி அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை !

**தென்காசி, அக். 30 -**

**தென்காசியில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது, “தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைக் காப்போம்; ஒன்றிய பா.ஜ.க. அரசின் வாக்குத் திருட்டை முறியடிப்போம்” என்று உறுதிபடக் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2025) தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-

எங்கும் இயற்கை எழில் கொஞ்சும் மேற்குத் தொடர்ச்சி மலையும் உச்சந்தலையைப் போல உள்ளத்தையும் இதமாக்கும் குற்றாலமும் - இப்படி தூறலும் சாரலும் கொண்டு மக்கள் மனங்களை குளிர்விக்கும் மண் இந்த தென்காசி மண்.

வடக்கே ஒரு காசி என்றால், தெற்கே ஒரு தென்காசி என்று சொல்லத்தக்க வகையில் காசி விஸ்வநாதர் கோவில் அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட கோவில் குடமுழுக்கை 19 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த ஏப்ரல் மாதத்தில் நடத்திய மகத்தான அரசு நம்முடைய திராவிட மாடல் அரசு. அதிலும், இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பு, ஆலங்குளத்தில் “கலைஞர் கனவு இல்லம்” திட்டத்தில் கடந்த மாதம் “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” நிகழ்ச்சியில் பேசிய அன்பு மகள் பிரேமா அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு வீடு வழங்கக்கூடிய ஆணையை நாங்கள் வழங்கினோம். இப்போது விரைந்து அங்கு வீடு கட்டக்கூடிய பணி வேகம்,



வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதேபோல, இப்போது மேடையில், 1 இலட்சமாவது பயனாளியான இலத்தூர் கிராமத்தைச் சார்ந்த திருமதி சுமதி முத்துக்குமார் என்பவரின் கனவு இல்லத்திற்கான சாவியை உங்கள் முன்னால் நான் வழங்கியிருக்கிறேன்.

காலுக்கு கீழ் கொஞ்சம் நிலமும் - தலைக்கு மேல் ஒரு கூரையும் வேண்டும் என்பது, ஒவ்வொரு மனிதனின் கனவு! வீடு என்பது ஒவ்வொருடைய குடும்பத்தின் கனவு!

### குடிசையில்லா தமிழ்நாடு!

குடிசைகளுக்குப் பதிலாக நிரந்தர வீடுகளை கட்டித் தரவேண்டும் என்று குடிசையில்லா தமிழ்நாடு அமைய வேண்டும் என்று ஏராளமான திட்டங்களை உருவாக்கிய நவீனத் தமிழ்நாட்டின் சிற்பிதான் தலைவர் கலைஞர் அவர்களின் கனவையும் ஏராளமான குடும்பங்களின் கனவுகளையும், ஒருசேர நிறைவேற்றுகின்ற மகிழ்ச்சியோடு உங்களிடம் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

இந்தத் திட்டத்தை மிகச் சிறப்பாகவும், வேகமாகவும் செயல்படுத்தி வரக்கூடிய ஊரக உள்ளாட்சித் துறைக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அரசுக்கு நற்சான்றிதழை பெற்றுத் தந்த கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன்!

மாவீரன் பூலித்தேவன் தளபதி ஒண்டிவீரன் தேவநேயப் பாவாணர் போன்ற பெருமக்களைத் தந்து பெருமைகளை கொண்ட இந்த தென்காசி மாவட்டத்தில் மகத்தான அரசு விழாவை மாபெரும் மக்கள் திருவிழாவாக மாநாட்டைப் போல ஏற்பாடு செய்திருக்கிறார் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்- இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள். அவருடைய அரசியல் பொதுவாழ்க்கையில் இதைப் போல, எத்தனையோ பிரமாண்டமான மாநாடுகளை, நிகழ்ச்சிகளை அவர் நடத்தி இருந்தாலும், இந்த நிகழ்ச்சி எல்லாவற்றிற்கும் மகுடம் வைப்பதைப் போல அமைந்திருக்கிறது.

வருவாய்த் துறை அமைச்சராக அவரின் மகத்தான சாதனை என்ன தெரியுமா? இதுவரைக்கும் இல்லாத அளவுக்கு இவருடைய Periodல்தான் தமிழ்நாடு முழுவதும் இதுவரைக்கும் 10 இலட்சத்து 26 ஆயிரத்து 743 பேருக்கு இலவச வீட்டு மனைப் பட்டா வழங்கி இருக்கிறோம்!

அதேபோல, 9 இலட்சம் முதியோருக்கு புதிதாக முதியோர் ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கிறது. வருவாய்த் துறை சார்பில், 17 விதமான சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் விண்ணப்பித்த நான்கரை இலட்சம் பேருக்கு சான்றிதழைத் தராமல் வைத்திருந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் சான்றிதழை வழங்குவதுதான் இந்த சாத்தூராரின் சாதனை!

இப்படி தன்னுடைய அனுபவத்தாலும், அமைதியான செயல்களாலும் அரசுக்கு நற்சான்றிதழை பெற்றுத் தந்திருக்கக் கூடிய அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்கள்! வாழ்த்துகள்!

அதேபோல, அவருக்குத் துணை நின்று பணியாற்றியிருக்கக்கூடிய தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர், அவர்களுக்கும், தென்காசி மாவட்ட அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

# பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் 118ஆவது பிறந்த நாள்!

## நினைவிடத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று மலர் தூவி மரியாதை!

**பசும்பொன், அக். 30 -**

**பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118ஆவது பிறந்த நாள் விழாவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள தேவர் நினைவிடத்தில் மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்.**

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 118ஆவது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள அவருடைய நினைவிடத்தில் இன்று (30.10.2025) காலை 9.30 மணியளவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

அதே நேரத்தில், சென்னை, அண்ணா சாலை, நந்தனம் சந்திப்பில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு இன்று (30.10.2025) காலை 9.30 மணியளவில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின்



பிரதிநிதிகள் அனைவரும் மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

2007-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலத்தில், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் நூற்றாண்டு விழா சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அவர் வாழ்ந்த இல்லம் புனரமைக்கப்பட்டு நூற்றாண்டு தோரண வாயில் அமைக்கப்பட்டு, புகைப்படக் கண்காட்சிக் கூடம், அணையா விளக்கு, புதிய நூலகக் கட்டடம், முளைப்பாரி மண்டபம், முடிகாணிக்கை மண்டபம் அமைக்கப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தேவர் சமுதாய மக்கள் பயன்பெறும் வகையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரில் நெல்லை மாவட்டம் மேல்நீலிதநல்லூர், இராமநாதபுரம் மாவட்டம் கமுதி, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி ஆகிய மூன்று இடங்களில் அரசு கல்லூரிகள், மதுரை மாநகரில் மிக உயரமான பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் சிலை முதலியவற்றை அமைத்துத் தேவர் பெருமகனாருக்குப் பெருமைகள் சேர்த்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் தமிழ்நாடு அரசின் சார்பில், தெய்வீகத்திருமகனார் உ.முத்துராமலிங்கத் தேவர் அரங்கம் புதிதாக அமைத்து, 28.10.2024 அன்று திறந்து வைத்து சிறப்பித்தார்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பிறந்ததும், மறைந்ததும் அக்டோபர்த் திங்கள் 30ஆம் நாள் ஆகும். எனவே, தேவர் திருமகனாரின் ஜெயந்தியும், குருபூஜையும் பசும்பொன்னில் ஒரே நாளில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.


வாய்மையே வெல்லும்

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
அவர்களின்
118 ஆவது பிறந்த நாள் மற்றும் குரு பூஜை



தமிழ்நாடு அரசின் சார்பில்
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின்
நினைவிடத்தில்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
மாலை அணிவித்து மலர் தூவி
மரியாதை செலுத்துகிறார்கள்

நாள் : 30.10.2025, வியாழக்கிழமை,
நேரம் : காலை 9.30 மணி,
இடம் : பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம்

சென்னை மாநகரில் தமிழ்நாடு அரசின் சார்பில்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள்
மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

நாள் : 30.10.2025, வியாழக்கிழமை, நேரம் : காலை 9.30 மணி
இடம் : நந்தனம் சந்திப்பு, அண்ணா சாலை, சென்னை

செ.ம.தொ.இ / 1280 / வரைகலை / 2025

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in    இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009